20th July 1957]

* 154 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri K. N. Palaniswami Gounder) : Will the Hon. the Minister for Home be pleased to state the expenditure incurred towards travelling allowances and other expenses in respect of officials who participated in the First Southern Regional Seminar of Key Village Officers organized by the Animal Husbandry Department of the Government of Madras held on the 18th, 19th and 20th May 1957 at Coimbatore?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : An expenditure of Rs. 1,175 was incurred on the travelling allowance of the officers of the Madras Animal Husbandry Department who attended the Seminar. The State Government also incurred a further expenditure of Rs. 1,371 in connection with the arrangements made for the conduct of the Seminar.

*Increase of prices on account of introduction of decimal coinage*

* 155 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is rise in the prices of articles on account of the introduction of decimal coinage and if so, what steps have been taken to check such rise in prices?

The Hon. Sri C. SUBRAMANIAM : There has been a slight increase in the prices of certain articles due to the tendency on the part of the merchants to put up the prices slightly when they are converted into decimal system by rounding off the actual price generally to the next higher naya paise. It is not possible to take any action to check this small rise in prices.

Sri S. PAKKIRISAMI PILLAI : தசாம்ச நாணயங்கள் வந்த பிறகு அரசாங்கத்தின் ஆதரவில் உள்ள ஸ்தாபனங்களிலெல்லாம், அந்த ஸ்தாபனத்தார் பல விவகாரங்களில் நயா பைசா பின்னங்களை முழு நாணயமாகத் திருத்திக்கொண்டு மதிப்பை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குச் சாதகமான விவகாரங்களில் அப்படித் திருத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்கப்படும்போது அவர்கள் அப்படி செய்துகொள்ளவில்லை; குறைவாகவே கொடுக்கிறார்கள்; உதாரணமாக 3 அணா பஞ்சப்படி கொடுக்கும் விஷயத்தில் குறைவான கணக்கையே எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் மற்ற விவகாரங்களில் எடுத்துக்கொள்ளும் நாணய மதிப்பைப் போலவே தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்கும்போதும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தார் கட்டளை இடுவார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : I may refer the hon. Member to my colleague in charge of Industries who will certainly look into the matter.

Sri M. P. SUBRAMANIAM : இந்தமாதிரி ஒவ்வொரு சாதாரணப் பொருள்களின் விலையிலும் புதிய காசின் பின்னம் ஒரு காசாக மதிக்கப்பட்டு, அந்த அளவுப்படி பணம் பொருள்களை வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இதன் காரணமாக பல அத்தியாவசியமான பொருள்கள் விலை உயர்ந்திருக்கின்றன. இதன் விளைவாக வாழ்க்கைச் செலவுப் புள்ளி எவ்வளவு உயர்ந்திருக்கின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட முடியுமா?

[20th July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று திட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால், வாழ்க்கைச் செலவுப் புள்ளி இரண்டு சதவிகிதம் உயர்ந்திருக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that the prices of some magazines and newspapers have been raised?

THE HON. SRI C. SUBRAMANIAM : Of course they have increased the prices. But that does not cause us any concern. We are concerned really with the increase in price of articles which are absolutely essential to the community.

*Mental Hospital, Madras*

* 156 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to relieve congestion in the Mental Hospital, Kilpauk, Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : In March last the Government have increased the bed-strength of the Mental Hospital, Madras, from 888 to 1800. An expenditure of Rs. 74,900 has been sanctioned towards certain additions and alterations to the buildings of the hospital.

Proposals for the opening of a Mental Hospital at Madurai, the establishment of a Mental Jail to accommodate separately criminal mental patients and for the transfer of civil and criminal mental patients belonging to the Andhra State to the Mental Hospitals in Andhra Pradesh are also under the consideration of Government.

SRI M. S. SELVARAJAN : குற்றாலத்தில் ஒரு தனியார் "மெண்டல் ஹாஸ்பிடல்" இருக்கிறது. இயற்கையாகவே மனோ வியாதியைக் குணப்படுத்தக்கூடிய சூழ்நிலை குற்றாலத்தில் இருப்பதால், குற்றாலத்திலுள்ள அந்த ஆஸ்பத்திரியை தானே எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது, தென்காசி தாலூகாவில் ஒரு இடத்தில் "க்ரிமினல் மெண்டல் பேஷண்ட்ஸ்"-க்காக ஒரு ஆஸ்பத்திரியை அரசாங்கத்தார் ஏற்படுத்தப்போகிறார்கள். அதை வேண்டுமென்று எடுத்துக்கொள்ள யாராவது முன்வந்தால் பிறகு இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

SRI S. B. ADITYAN : ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளிகளும் கேரள ராஜ்யத்தைச் சேர்ந்த நோயாளிகளும் இப்போது சென்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள் அல்லவா? அந்த நோயாளிகளை அந்த ராஜ்யங்களுக்கு மாற்றுவதுபற்றி அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த ராஜ்யங்களுக்கு அவர்களை அனுப்பி, இங்குள்ள நெருக்கடியை அரசாங்கம் குறைக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்விக்கு பதிலளிக்கையில் கடைசியில் இந்த உப கேள்விக்கான பதிலையும் சொன்னேன். இங்குள்ள ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த நோயாளிகள் சுமார் 102 பேர்கள். அவர்களை ஆந்திர ராஜ்ய ஆஸ்பத்திரியில் எடுத்துக்கொள்வதற்கு அந்த அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், அந்த நோயாளிகளை அங்கே அனுப்புவது அமலுக்கு வர வேண்டும்.